The Hindu (Tamil)

Dated: 25.06.2024

# விக்கிரவாண்டியில் 29 வேட்புமனுக்கள் ஏற்பு

**● விழுப்புரம்**

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிட 64 பேர் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில், திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 29 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

திமுக உறுப்பினர் புகழேந்தி மறைவை தொடர்ந்து, விக்கிரவாண்டி சட்டப் பேரவை தொகுதிக்கு ஜூலை 10-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. வேட்புமனு தாக்கல் ஜூன் 14-ம் தேதி தொடங்கி 21-ம் தேதி முடிவடைந்தது. மொத்தம் 64 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில், விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று காலை 11 மணி அளவில் நடைபெற்றது.

இதில், திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 29 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டதாகவும், 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் அறிவித்தார். முறையாக மனு தாக்கல் செய்தும், வேண்டுமென்றே நிராகரிக்கப்பட்டதாக சுயேச்சை வேட்பாளர்கள் சிலர் தர்ணாவில் ஈடுபட்டதால் சிறிது நேரம் சலசலப்பான சூழல் ஏற்பட்டது.

மனுக்களை வாபஸ் பெற நாளை (ஜூன் 26) கடைசி நாள். அதற்கான அவகாசம் முடிந்ததும், நாளை மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

இத்தேர்தலில், ஆளும்கட்சியான திமுக சார்பில் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, பாமக சார்பில் வன்னியர் சங்கத்தின் மாநில துணை தலைவர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் மருத்துவர் அபிநயா ஆகியோர் போட்டியிடுகின்றனர். அதிமுக போட்டியிடாததால், திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி என மும்முனை போட்டி நிலவுகிறது. வாக்குப்பதிவு ஜூலை 10-ம் தேதி, வாக்கு எண்ணிக்கை 13-ம் தேதி நடைபெற உள்ளது.

EC, TN accepted the 29 Nominations in Vikravandi Assembly contituency By-elections

Daily Thanthi

Dated: 25.06.2024

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில்

# தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 29 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்பு

## 35 மனுக்கள் நிராகரிப்பு

விக்கிரவாண்டி, ஜூன்.25-

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 29 பேரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டன. 35 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### இடைத்தேர்தல்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10-ந்தேதி நடைபெற உள்ளது.

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 14-ந்தேதி தொடங்கி 21-ந்தேதியுடன் முடிவடைந்தது. இத்தொகுதியில் போட்டியிடுவதற்காக தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் அபிநயா உள்பட 64 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

### வேட்பு மனுக்கள் பரிசீலனை

இந்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நேற்று காலை 11 மணியளவில் தேர்தல் நடத்தும் அலுவலகமான விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்காக வேட்பாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த கட்சியினர் மற்றும் கூட்டணி கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் வந்திருந்தனர்.

இந்நிகழ்வு தேர்தல் பொது பார்வையாளர் அமித்சிங் பன்சால் முன்னிலையில் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் யுவராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினர், வேட்பு மனுக்களை பரிசீலனை செய்யும் பணியை மேற்கொண்டனர்.

### 29 பேரின் மனுக்கள் ஏற்பு

அப்போது வேட்பாளர்கள் தாக்கல் செய்த ஆவணங்களில் முறையாக கையெழுத்து போடப்பட்டுள்ளதா? என்று ஒவ்வொரு ஆவணமாக சரிபார்த்தனர். மேலும் வேட்புமனுவுடன் தேவையான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதா? என்றும் பரிசீலனை செய்தனர்.

இதன் முடிவில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் அபிநயா உள்பட 29 பேரின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

### 35 மனுக்கள் நிராகரிப்பு

ஒரே வேட்பாளர் கூடுதலாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்த வகையில் 8 மனுக்களும், மாற்று வேட்பாளராக தாக்கல் செய்தவர்களின் 4 மனுக்களும் மற்றும் சாதிச் சான்றிதழ் உள்ளிட்ட உரிய ஆவணங்களை தாக்கல் செய்யாததால் சில மனுக்களும் என 35 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மனுக்களை வாபஸ் பெறுவதற்கு நாளை (புதன்கிழமை) கடைசி நாளாகும். எனவே வேட்பு மனுவை திரும்ப பெற்றுக்கொள்ள விருப்பமுள்ள வேட்பாளர்கள் நாளை மாலை 3 மணிக்குள் வேட்பு மனுவை திரும்ப பெற்றுக்கொள்ளலாம். நாளை மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தர்ணா

இதற்கிடையே தங்களது வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து சுயேச்சை வேட்பாளர்கள் தாலுகா அலுவலகம் முன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

EC, TN accepted the 29 persons Nominations in Vikravandi Assembly Contituency By elections.

Dinamalar

Dated: 25-06-2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல் 29 வேட்பு மனுக்கள் ஏற்பு

**விக்கிரவாண்டி, ஜூன் 25–**

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், 29 வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஜூலை 10ம் தேதி நடக்கிறது. இத்தேர்தலில் போட்டியிட, கடந்த 14ம் தேதி முதல் 21ம் தேதி வரை மொத்தம் 64 பேர் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் நேற்று காலை 11:00 மணிக்கு தேர்தல் பொது பார்வையாளர் அமித்சிங் பன்சால் முன்னிலையில் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் தலைமையில் பரிசீலிக்கப்பட்டது.

அதில், தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்ளிட்ட 29 பேரின் மனுக்கள் ஏற்கப்பட்டன. பிற மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.



விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள், பொது பார்வையாளர் அமித்சிங் பன்சால், தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டன.

இதைக் கண்டித்து சுயேச்சை வேட்பாளர்களான செல்வி, விநாயகம், இசக்கிமுத்து, கோவிந்தராஜ், முத்துக்குமார் உள்ளிட்டோர், தங்கள் மனுக்களை தேர்தல் நடத்தும் அலுவலர் வேண்டுமென்றே நிராகரித்ததாக கூறி தர்ணாவில் ஈடுபட்டனர். அதேபோன்று மாற்றுத்திறனாளி வேட்பாளர் பாலகிருஷ்ணன், தங்களுக்கு உரிய சாய்தள வசதி ஏற்படுத்தவில்லை எனக் கூறி தர்ணாவில் ஈடுபட்டார். அவர்களை போலீசார் சமாதானப்படுத்தி கலைந்து போகச் செய்தனர்.

மனுக்கள் வாபஸ் பெற, நாளை 26ம் தேதி கடைசி நாளாகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் மற்றும் சின்னம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

EC, TN accepted the 29 persons nominations in Vikravandi Assembly contituency Byelections.